கவனிக்க .- *2014.11.28 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* II *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1892 - 2014 දෙසැම්බර් මස 05 වැනි සිකුරාදා - 2014.12.05

1892 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
பதவிகள் - வெற்றிடம்	1978	வரவு செலவுக் கூற்றுகள்	-
பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்	-	வரவு செலவுத் திரட்டுகள்	-
உள்ளூராட்சி அறிவித்தல்கள்	1989	ஆதன விற்பனைகள்	-
துணைவிதிகள்	-	ஆயவிற்பனையும் குத்தகையும்	-
உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்		வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள்	-
கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	-	நானாவித அறிவித்தல்கள்	1993

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2014, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, சட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, சட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பீ. எச். எல். வீ. டீ சில்வா,
அரசாங்க அமுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பதவிகள் — வெற்றிடம்

கங்கஇஹல கோறளே பிரதேச சபை

மத்திய மாகாண அரசாங்க சேவையில் உள்ள பதவி வெற்றிடங்கள்

மத்திய மாகாண அரசாங்க சேவையில் கங்கஇஹல கோறளே பிரதேச சபையில் நிலவும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவிகளின் ஆட்சேர்ப்புக்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டுள்ள கங்கஇஹல கோறளே பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள கங்கஇஹல கோறளே பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர் இல.	பதவிப்பெயர்	வெற்றிடங்களின் எண்ணிக்கை	சம்பளத்திட்டம்	கல்வித் தகைமைகள்
1	நீர்/வீதித் தொழிலாளர்கள் III ஆம் வகுப்பு	2	பி.எல்.1-2006 ஏ ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600	க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா.த.) சிங்களம், தமிழ்மொழி உட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

2. **ஆட்சேர்ப்புக்கான பொதுவான நிபந்தனைகள்** .-

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து தொடரான 3 வருட காலம் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.);

(iv) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

(v) குற்றவியல் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் கருதப்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(vi) கங்க இஹல கோறளே பிரதேச சபையில் தற்போது தற்காலிக, சமயோசித, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் முன் உரிமை அளிக்கப்படும்.

3. **ஆட்சேர்ப்பு முறை**.-

(1) விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்;

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** .-

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(ii) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்பு செய்ய வேண்டும் ;

(iii) நியமனங்கள் 3 வருடகாலம் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும் ;

(iv) போதியளவு பிணை வைப்புத்தொகையைப் பணமாகவோ அல்லது வேறு வகையிலோ செலுத்த வேண்டுமென விதிக்கும் பட்சத்தில் பிரதேச சபையில் அதனைச் செலுத்துதல் வேண்டும்;

(v) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக தாபன விதிக்கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், கௌரவ ஆளுநர் அவர்களது கட்டளைகளுக்கும், மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர் அவர்களது கட்டளைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்;

(vi) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும், அல்லது திருத்தியமைக்கும் அறிவிப்பை இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரங்களும் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

5. விண்ணப்பிக்கவேண்டிய முறை.- இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு 'செயலாளர், கங்க இஹல கோறளே பிரதேச சபை, குருந்துவத்த பஸார்' என்ற முகவரிக்கு 2014.12.17 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.) (தற்போது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.) விண்ணப்பங்கள் A4 அளவு தாளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்களும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பப்படவேண்டிய ஆவணங்கள்.- விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது பிரதிகளை இணைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்வித் தகைமைச் சான்றிதழ் ;
(3) தமது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளர் வழங்கிய சான்றிதழ் ;
(4) அண்மையில் பெறப்பட்ட 2 குணச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று வதிவிடம் கிராம அலுவலரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.) ;
(5) சேவைச் சான்றிதழ் (தற்போது அரச சேவையில் இருப்போருக்கு மட்டும்)

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் கருத்து முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள கருத்துக்களே முன்னிலை வகிக்கும்.

டி. ஏ. ரஞ்சனி பிரேமலதா,
செயலாளர்,
கங்க இஹல கோறளே பிரதேச சபை.

கங்க இஹல கோறளே பிரதேச சபை அலுவலகம்,
குருந்துவத்த பஸார்,
2014, நவெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

கங்க இஹல கோறளே பிரதேச சபை

..... பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆ) முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. பிறந்த திகதி :----.
   வருடம் :----, மாதம் :----, திகதி :----.
4. ஆண்/பெண் :----.
5. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
6. தேசிய இனம் :----.
7. வம்சாவழியினாலா அல்லது பதிவினாலா இலங்கைப் பிரசை?:----.
8. கல்வித்தகைமைகள் :----.
9. தொழிற் தகைமைகளும் சேவை அனுபவமும் :----.
10. ஏற்கனவே இந்தப் பிரதேச சபையில் பணியாற்றுபவராயின், வகிக்கும் பதவியும், சேவைக்காலமும் :----.
    நியமனத்தின் தன்மை (நிரந்தரம்/சமயோசித/தற்காலிக/ஒப்பந்த/பதிலீட்டு அடிப்படை)

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின், தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடின்றிச் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கும் நான் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----

சீதாவக்க பிரதேச சபை

மேல் மாகாண அரசாங்க சேவை வெற்றிடங்கனை நிரப்புதல்

மேல் மாகாண அரசாங்க சேவையில் சீதாவக்க பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளை நிரப்புவதற்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுள்ளவர்களும் மேல்மாகாண சபைக்குட்பட்ட பிரதேசத்தில் 3 வருடங்களுக்கு மேல் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (சீதாவக்க பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் முழுமையாக மூன்று வருடங்கள் நிரந்தர வதிவுமாயுள்ளவர்களுக்கும் தற்பொழுது நிரந்தர, நிரந்தரமற்ற, தற்காலிக, ஒப்பந்த மற்றும் செயற்றிட்ட அடிப்படையில் கடமையாற்றுபவர்களுக்கும் முன் உரிமை அளிக்கப்படும்.)

பதவி	வெற்றிடங்கள்	சம்பளம் அளவுத்திட்டம்	கல்வித்தகைமைகளும் ஏனைய தகைமைகளும்
சாரதி II ஆ வகுப்பு	01	அ.நி.சு. 06/2006 (IV) அமைய PL-3-2006A ரூபா 12,470-10×130-10×145-12×160-12×170- ரூபா 18,860 (4 ஆம் படி ஆரம்ப படிக்கு முன் தடைதாண்டல் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.)	(1) கல்விப்பொதுத்தராதரப் பத்திர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரு அமர்வில் குறைந்தபட்சம் 5 பாடங்களில் சித்தியெய்திருக்க வேண்டும்.) (2) தனியார்/ வாடகை வாகனம் மற்றும் பார ஊர்திகள் 24 தொன்னுக்கு குறைந்த ஸ்டேசன் வெகன் வாகனம் ஓட்டுதல் தொடர்பான போக்குவரத்து ஆணையாளரினால் திறமை தொடர்பான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (3) குறைந்தபட்சம் 5 அடி உயரமிருத்தல் வேண்டும். (4) சாரதியாக குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்) (5) பகல் மற்றும் இரவு நேரங்களில் தொழில் புரியக்கூடிய தேகாரோக்கியத்துடன் சிறந்த கண்பார்வையுள்ளவராக இருத்தல் வேண்டும். (6) வீதிச் சட்டக் கோவை பற்றிய சிறந்த அறிவுடைய வராக இருத்தல் வேண்டும். (7) சாரதிப் பதவிக்கான திணைக்களப் பிரதிநிதி யொருவரும் மோட்டார் போக்குவரத்து திணைக் களப் பிரதிநிதியொருவரும் பொலிஸ் போக்கு வரத்துப் பிரிவின் அதிகாரியொருவருடன் கூடிய குழுவினால் பரிசீலிக்கப்படும் வாகனம் ஓட்டும் திறமைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் .-

(1) விண்ணப்பதாரி வம்சாவழியாக அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் கோரப்படும் தினத்திற்கு சீதாவக பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் முழுமையாக 3 வருடகால நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும். (பிரதேச செயலாளரினால் வதிவிடம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) ;

(3) சீதாவக பிரதேச சபையில் நிரந்தர, நிரந்தரமற்ற, தற்காலிக, ஒப்பந்த மற்றும் செயற்றிட்ட அடிப்படையில் கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

(4) சிறந்த ஒழுக்கமுள்ளவராகவும் சிறந்த தேகாரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(5) 2014.12.19 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஆயினும் தற்பொழுது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர நியமனமுள்ளவர்களுக்கு இது பொருந்தாது.)

(6) விண்ணப்பதாரி குற்றவியல் தண்டனை சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டனை பெறாதவராகவும் அரசாங்க சேவையில் பதவியிறக்கப்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(7) அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர சேவைகளுக்கு விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு முழுமையாக 5 வருட காலத்தில் சகல சம்பள ஏற்றங்களையும் உரிய தினத்தில் பெற்றிருப்பதுடன் திருப்திகரமான சேவைக்காலமும் இருத்தல் வேண்டும்;

(8) பொது நிருவாக சுற்றுநிரூபம் 24/95 இன்படி சேவையில் இணைத்துக்கொள்ளப்படும்;

(9) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேவையான சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(10) இணைத்துக்கொள்ளும் விதிமுறைகளின்படி முறையான நேர்முகப்பரீட்சையில் தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்;

(11) விண்ணப்பங்கள் கோரப்படும்பொழுது அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பொழுதும் அல்லது சேர்த்துக்கொள்வதை தாமதப்படுத்துதல் அல்லது மாற்றுதல் அல்லது இவ்வறிவித்தலை திருத்துதல் அல்லது இரத்துச்செய்வதற்குரிய முழு அதிகாரமும் சீதாவக்க பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

சேவை நிபந்தனைகள் .-

(1) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுள்ளதுமாகும்;

(2) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல்;

(3) தகுதிகாண் அடிப்படையில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படுபவர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்தின் பின் சேவை, வரவு, நடத்தை என்பவற்றில் உயர் நிலையிலிருக்கும் சேவையாளர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனம் வழங்கப்படும்;

(4) இவ்விணைத்துக்கொள்ளும் சட்டதிட்டங்களுக்கு மேலதிகமாக தாபனக்கோவைச் சட்டதிட்டங்களுக்கும் மேல்மாகாண நிதிப்பிரமாணங்களுக்கும் ஆளுநரின் கட்டளைகளுக்கும் மேல்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் நிபந்தனை சட்டதிட்டங்களுக்கும் உள்ளூராட்சி மன்றத்தின் சட்டப்பிரமாணங்களுக்கும் சட்டத்தின் விதிமுறைகளுக்கும் சீதாவக்க பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் அறிவிக்கப்படும் ஆணைகளுக்கமைய கடமையாற்ற உடன்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் முறை.- இவ்வறிவித்தலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய, A4 அளவுடைய தாளில் விண்ணப்பத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2014.12.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் "செயலாளர், சீதாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் வந்து கையளித்தல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் அல்லது பிழையான விலாசம் எழுதி திருப்பி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பு கூறப்படாததுடன் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(2) தேசிய அடையாள அட்டை ;

(3) கல்விச் சான்றிதழ்கள் அல்லது கூடிய கல்வித்தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;

(4) பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(5) சேவைத்தகுதிகளை காட்டும் சான்றிதழ் ;

(6) சேவை அனுபவச் சான்றிதழ்.

கே. ஏ. சந்தன பத்மசிறி,
செயலாளர்,
சீதாவக்க பிரதேச சபை,
ஹங்வெல்ல.

பிரதேச சபை அலுவலகம்,
சீதாவக்க,
ஹங்வெல்ல,
2014, நவெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சீதாவக்க பிரதேச சபை

மேல் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல்

சாரதி சேவையில் II (ஆ) வகுப்பு

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : -----.
2. முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர்கள் :-----.
   நிரந்தர வதிவிட மாவட்டம் :------.
3. விலாசம் : -----.
4. பால் :------.
5. பிறந்த திகதி : - ஆண்டு : -----, மாதம் : -----, திகதி : -----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : -----.
7. நீர் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் வம்சாவழியாகவா? அல்லது பதிவின் மூலமாகவா? :-----.
8. கல்வித்தகைமை :-----.
   வேறு தகைமைகள் :-----.
9. தொழில் தகைமை :-----.
10. சேவை அனுபவம் :-
    (1) தற்பொழுது சேவை புரியும் நிறுவனம் :-----.
    (2) தற்பொழுது வகிக்கும் பதவி :-----.
    (3) அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
    (4) இதற்கு முன் சேவை புரிந்த இடமும் பதவியும் :-----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதன் சட்டதிட்டங்களுக்கு அமைய பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டபின் இவ்வாறான தவறு நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

12-57/1

சீதாவக்க பிரதேச சபை

மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல்

மேல் மாகாண அரசாங்க சேவையின் சீதாவக்க பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளை நிரப்புவதற்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுள்ளவர்களும் மேல்மாகாண சபைக்குட்பட்ட பிரதேசத்தில் 3 வருடங்களுக்கு மேல் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (சீதாவக்க பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் முழுமையாக மூன்று வருடங்கள் நிரந்தர வதிவிடமாயுள்ளவர்களுக்கும் தற்பொழுது நிரந்தர, நிரந்தரமற்ற, தற்காலிக, ஒப்பந்த மற்றும் செயற்றிட்ட அடிப்படையில் கடமையாற்றுபவர்களுக்கும் முன் உரிமை அளிக்கப்படும்.)

பதவி	வெற்றிடங்கள்	சம்பளம் அளவுத்திட்டம்	கல்வித்தகைமைகளும் ஏனைய தகைமைகளும்
காவலாளி	1	அ.நி.சு. 06/2006 (IV) அமைய PL-1-2006A ரூபா 11,700-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 (4 ஆம் படி ஆரம்ப படிக்கு முன் தடைதாண்டல் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.)	கல்விப்பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் .-

(1) விண்ணப்பதாரி வம்சாவழியாக அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் கோரப்படும் தினத்திற்கு சீதாவக பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் முழுமையாக 3 வருடகால நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும். (பிரதேச செயலாளரினால் வதிவிடம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) ;

(3) சீதாவக பிரதேச சபையில் நிரந்தர, நிரந்தரமற்ற, தற்காலிக, ஒப்பந்த மற்றும் செயற்றிட்ட அடிப்படையில் கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

(4) சிறந்த ஒழுக்கமுள்ளவராகவும் சிறந்த தேகாரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(5) 2014.12.19 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஆயினும் தற்பொழுது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர நியமனமுள்ளவர்களுக்கு இது பொருந்தாது.)

(6) விண்ணப்பதாரி குற்றவியல் தண்டனைச்சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டனை பெறாதவராகவும் அரசாங்க சேவையில் பதவியிறக்கப்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(7) அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர சேவைகளுக்கு விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு முழுமையாக 5 வருட காலத்தில் சகல சம்பள ஏற்றங்களையும் உரிய தினத்தில் பெற்றிருப்பதுடன் திருப்திகரமான சேவைக்காலமும் இருத்தல் வேண்டும்;

(8) அரசாங்க நிருவாக சுற்றுநிரூபம் 24/95 இன்படி சேவையில் இணைத்துக்கொள்ளப்படும்;

(9) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேவையான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(10) இணைத்துக்கொள்ளும் விதிமுறைகளின்படி முறையான நேர்முகப்பரீட்சையில் தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்;

(11) விண்ணப்பங்கள் கோரப்படும்பொழுது அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பொழுதும் அல்லது சேர்த்துக்கொள்வதை தாமதப்படுத்துதல் அல்லது மாற்றுதல் அல்லது இவ்வறிவித்தலை திருத்துதல் அல்லது இரத்துச்செய்வதற்குரிய முழு அதிகாரமும் சீதாவக்க பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

சேவை நிபந்தனைகள் .-

(1) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுள்ளதுமாகும்;

(2) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்;

(3) தகுதிகாண் அடிப்படையில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படுபவர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்தின் பின் சேவை, வரவு, நடத்தை என்பவற்றில் உயர் நிலையிலிருக்கும் சேவையாளர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனம் வழங்கப்படும்;

(4) இவ்விணைத்துக்கொள்ளும் சட்டதிட்டங்களுக்கு மேலதிகமாக தாபனக்கோவைச் சட்டதிட்டங்களுக்கும் மேல்மாகாண நிதிப்பிரமாணங்களுக்கும் ஆளுநரின் கட்டளைகளுக்கும் மேல்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் நிபந்தனை சட்டதிட்டங்களுக்கும் உள்ளூராட்சி மன்றத்தின் சட்டப்பிரமாணங்களுக்கும் சட்டத்தின் விதிமுறைகளுக்கும் சீதாவக்க பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் அறிவிக்கப்படும் கட்டளைகளுக்கமையவும் கடமையாற்ற உடன்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் முறை.- இவ்வறிவித்தலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய, A4 அளவுடைய தாளில் விண்ணப்பத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2014.12.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் "செயலாளர், சீதாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் வந்து கையளித்தல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் அல்லது பிழையான விலாசம் எழுதி திருப்பி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பு கூறப்படாததுடன் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(2) தேசிய அடையாள அட்டை ;

(3) கல்விச் சான்றிதழ்கள் அல்லது கூடிய கல்வித்தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;

(4) பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(5) சேவைத்தகுதிகளை காட்டும் சான்றிதழ் ;

(6) சேவை அனுபவ சான்றிதழ்.

கே. ஏ. சந்தன பத்மசிரி,
செயலாளர்,
சீதாவக்க பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சீதாவக்க,
ஹங்வெல்ல,
2014, நவெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சீதாவக்க பிரதேச சபை

மேல் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல்

காவலாளி

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : -----.
2. முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர்கள் :-----.
   நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
3. விலாசம் : -----.
4. பால் :------.
5. பிறந்த திகதி : -
   ஆண்டு : -----, மாதம் : -----, திகதி : -----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : -----.
7. நீர் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் வம்சாவழியாகவா? அல்லது பதிவின் மூலமாகவா? :-----.
8. கல்வித்தகைமை :-----.
   வேறு தகைமைகள் :-----.
9. தொழில் தகைமை :-----.
10. சேவை அனுபவம் :-
    (1) தற்பொழுது சேவை புரியும் நிறுவனம் :-----.
    (2) தற்பொழுது வகிக்கும் பதவி :-----.
    (3) அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
    (4) இதற்கு முன் சேவை புரிந்த இடமும் பதவியும் :-----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதன் சட்டதிட்டங்களுக்கு அமைய பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டபின் இவ்வாறான தவறு நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
திகதி :-----. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

12-57/2

தங்காலை நகர சபை

தென் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

தங்காலை நகர சபையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக குறைந்தபட்சம் தகைமைகளையுடைய தென் மாகாணத்துக்குள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தற்போது தங்காலை நகர சபையில் அமைய, மாற்று, ஒப்பந்த, தற்காலிக, சலுகை அடிப்படையில் சேவை செய்வோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அட்டவணை

1.	பதவி	: சாரதி (III ஆம் வகுப்பு)
	பதவிகளின் எண்ணிக்கை	: 8
	சம்பளக் குறியீடு	: PL3/2006A
	சம்பளத்திட்டம் (மாதாந்தம்)	: ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170 - ரூபா 18,860 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
	கல்வி, ஏனைய தகைமைகள்	: க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஏதேனும் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். லொறி/உழவு இயந்திரம்/கை ட்ரக்டர்/நீர் பவுஸர்/கழிவகற்றும் பவுஸர்/கனரக வாகனங்கள் செலுத்துவது பற்றி மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் வாகன இயந்திர செயற்படுத்துனராக 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

2. பதவி : கனரக வாகன சாரதி (III ஆம் வகுப்பு)
பதவிகளின் எண்ணிக்கை : 1
சம்பளக் குறியீடு : PL3/2006A
சம்பளத்திட்டம் (மாதாந்தம்) : ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170 - ரூபா 18,860
(நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
கல்வி, ஏனைய தகைமைகள் : க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஏதேனும் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
கனரக வாகனங்கள் செலுத்துவது பற்றி மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் அத்தோடு

பெக்கோ இயந்திரம்/ஸ்கேவேட்டர்/மோட்டார் கேடர் கனரக வாகனங்கள் செலுத்துவது பற்றி அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் இயந்திர செயற்படுத்துனராக 3 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

3. பதவி : மின் தொழில்நுட்பவியலாளர் (III ஆம் வகுப்பு)
பதவிகளின் எண்ணிக்கை : 1
சம்பளக் குறியீடு : PL2/2006A
சம்பளத்திட்டம் (மாதாந்தம்) : ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170 - ரூபா 18,600
(நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
கல்வி, ஏனைய தகைமைகள் : க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஏதேனும் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மின் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு உரிய வகையில் இடைநிலை, தொழிற் கல்வி ஆணைக் குழு மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ள படி தேசிய தொழில் திறன் (N.V.Q.) குறைந்தபட்சம் 2ஆம் மட்ட தேர்ச்சியைப் பெற்றிருத்தல்

உரிய துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகும்.

4. பதவி : தச்சு தொழில்நுட்பவியலாளர் (III ஆம் வகுப்பு)
பதவிகளின் எண்ணிக்கை : 1
சம்பளக் குறியீடு : PL2/2006A
சம்பளத்திட்டம் (மாதாந்தம்) : ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170 - ரூபா 18,600
(நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
கல்வி, ஏனைய தகைமைகள் : க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஏதேனும் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தச்சுத் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு உரிய வகையில் இடைநிலை, தொழிற் கல்வி ஆணைக் குழு மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ள படி தேசிய தொழில் திறன் (N.V.Q.) குறைந்தபட்சம் 2ஆம் மட்ட தேர்ச்சியைப் பெற்றிருத்தல்

உரிய துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகும்.

5. பதவி : மேசன் (III ஆம் வகுப்பு)
பதவிகளின் எண்ணிக்கை : 1
சம்பளக் குறியீடு : PL2/2006A
சம்பளத்திட்டம் (மாதாந்தம்) : ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170 - ரூபா 18,600
(நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
கல்வி, ஏனைய தகைமைகள் : க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஏதேனும் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேசன் பதவிக்கு உரிய வகையில் இடைநிலை, தொழிற் கல்வி ஆணைக்குழு மூலம் தீர்மானிக் கப்பட்டுள்ள படி தேசிய தொழில் திறன் (N.V.Q.) குறைந்தபட்சம் 2ஆம் மட்ட தேர்ச்சியைப் பெற்றிருத்தல்

உரிய துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகும்.

6.	பதவி	: அலுவலக உதவியாளர் (III ஆம் வகுப்பு)
	பதவிகளின் எண்ணிக்கை	: 3
	சம்பளக் குறியீடு	: PL1/2006A
	சம்பளத்திட்டம் (மாதாந்தம்)	: ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160 - ரூபா 17,600 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
	கல்வி, ஏனைய தகைமைகள்	: க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஏதேனும் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
7.	பதவி	: சுகாதாரத் தொழிலாளர் (III ஆம் வகுப்பு)
	பதவிகளின் எண்ணிக்கை	: 3
	சம்பளக் குறியீடு	: PL1/2006A
	சம்பளத்திட்டம் (மாதாந்தம்)	: ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160 - ரூபா 17,600 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
	கல்வி, ஏனைய தகைமைகள்	: 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
8.	பதவி	: வேலை/வெளிக்கள தொழிலாளர் (III ஆம் வகுப்பு)
	பதவிகளின் எண்ணிக்கை	: 3
	சம்பளக் குறியீடு	: PL1/2006A
	சம்பளத்திட்டம் (மாதாந்தம்)	: ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160 - ரூபா 17,600 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
	கல்வி, ஏனைய தகைமைகள்	: 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
9.	பதவி	: மைதானப் பொறுப்பாளர் (III ஆம் வகுப்பு)
	பதவிகளின் எண்ணிக்கை	: 1
	சம்பளக் குறியீடு	: PL1/2006A
	சம்பளத்திட்டம் (மாதாந்தம்)	: ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160 - ரூபா 17,600 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
	கல்வி, ஏனைய தகைமைகள்	: க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் குறைந்தபட்சம் 2 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
10.	பதவி	: மயானப் பொறுப்பாளர் (III ஆம் வகுப்பு)
	பதவிகளின் எண்ணிக்கை	: 1
	சம்பளக் குறியீடு	: PL1/2006A
	சம்பளத்திட்டம் (மாதாந்தம்)	: ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160 - ரூபா 17,600 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
	கல்வி, ஏனைய தகைமைகள்	: க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் குறைந்தபட்சம் 2 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
11.	பதவி	: சுகாதார தொழிலாளர் (III ஆம் வகுப்பு) (கடின அழுக்கு மத்திய நிலையம்)
	பதவிகளின் எண்ணிக்கை	: 8
	சம்பளக் குறியீடு	: PL1/2006A
	சம்பளத்திட்டம் (மாதாந்தம்)	: ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160 - ரூபா 17,600 (நான்காவது சம்பளப் படிக்கு வரமுன் வினைத்திறமைக்காண் தடை)
	கல்வி, ஏனைய தகைமைகள்	: 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தேவையான ஏனைய தகைமைகளும் பொது நிபந்தனைகளும்.-

(1) அரசாங்க அல்லது அரசாங்க கூட்டுத்தாபன சேவையிலிருந்து திறமையீனம் காரணமாக கட்டாய ஓய்வு வழங்கப்பட்டவராகவோ, சேவையிலிருந்து கீழிறக்கம் செய்வதற்குப் பதிலாக அனுதாப மாற்று வழியாக ஓய்வு வழங்கப்பட்டவராகவோ, ஒரு தண்டனை காரணமாக ஓய்வு வழங்கப்பட்டவராகவோ முறையான ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ, தனது பதவியை விட்டுச் சென்றவராகவோ இருத்தல் கூடாது ;

(2) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசுக்கு எதிராக செயற்பட்டதற்காக குற்றவியல் தண்டனைக்கு நீதிமன்றமொன்றிலிருந்து குற்றவாளியாக்கப்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது ;

(3) ஏதேனும் குற்றவியல் செயற்பாட்டின்போது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டவராக அல்லது குற்றவியல் வழக்குச் சட்டத்தின் 449 ஆவது பிரிவின் பிரகாரம் நீதிமன்றமொன்றில் நடைபெற்ற வழக்கொன்றில் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது ;

(4) கடன் இறுக்க வகையற்றவராக பிரகடனப்படுத்தப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(5) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(6) சிறந்த நடத்தையுடனும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும் ;

(7) 2014.12.26 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாத 45 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களுக்கு இவ்வயர் மட்ட வயதெல்லை செல்லுபடியாகாது.)

(8) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குக் கிட்டிய 3 வருட காலம் தென் மாகாணத்திற்குள் நிரந்தர வதிவினராக இருத்தல் வேண்டும். (வதியும் பிரதேசத்தின் கிராம அலுவலரின் மூலம் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் பிரதேச செயலாளர் மூலம் அங்கீகரிக்கப்பட்டு வதிவை உறுதிப்படுத்த முடியும்) ;

(9) இந்த ஆட்சேர்ப்பு விண்ணப்பங்களை கோரப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது அதன் பின்னர் அல்லது இடையில் கைவிடுவதற்கு தங்காலை நகர சபைக்கு அதிகாரமுண்டு.

விசேட தகைமைகள்-

(1) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு அண்மிய 3 ஆண்டு காலம் தங்காலை நகர சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவினராக இருத்தல் ;

(2) சாரதி, கனரக வாகன இயக்குனர் பதவிகள் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரம் இருத்தல் ;

(3) மின் தொழில்நுட்பவியலாளர் பதவி தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மின் தொழில்நுட்ப அறிவு இருத்தல். இலத்திரனியல் உபகரணங்களைச் செயற்படுத்தும் அறிவு, கணினி இயந்திரம் செயற்படுத்துதல் அல்லது தொலைபேசித் தொகுதி பழுதுபார்த்தல் பற்றிய அறிவு, சட்டம் இடர் என்பவற்றுக்குப் பதிலீடு செய்யும் அறிவு, பூங்கா அலங்காரம் பற்றிய அறிவு, கலை அலுவல்கள் தொடர்பான அறிவு, தொலைநகல், நிழற்படப்பிரதி, அச்சு இயந்திரம் செயற்படுத்துதல், நடாத்திச் செல்லல் தொடர்பான அறிவு அல்லது வேறு விஷேட அறிவு இருத்தல்.

(4) தற்போது தங்காலை நகர சபையில் சம்பளம் பெற்றுக் கொண்டு தங்காலை நகர சபையில் சேவை செய்தல்.

இந்த விசேட தகைமைகளைப் பூரணப்படுத்துவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆட்சேர்ப்பு முறை-விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-

(1) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/அநாதைகள் மற்றும் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(2) அரசாங்க கொள்கைகளுக்கும், தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, தென் மாகாண சபையின் மூலம் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும், கட்டளைகளுக்கும், தாபன விதிக் கோவை, நிதிப்பிரமாணங்கள், அரசாங்கத்தின் வேறு பிரமாணங்கள், சுற்று நிரூபங்கள், ஆலோசனைகள், திணைக்கள கட்டளைகள் என்பவற்றுக்கும், அவற்றுக்கு ஏற்ப காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் திருத்தங்களுக்கும், தங்காலை நகர சபை மூலம் செய்யப்படும் கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு உடன்பட்டிருத்தல் வேண்டும் ;

(3) அரசாங்க ஊழியர்களின் பிணைச் சட்டமூலத்திற்கு ஏற்ப பிணை வைத்தல் வேண்டும் ;

(4) அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்ப விதிக்கப்படும் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

(5) ஆட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கு ஏற்ப பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்;

(6) சேர்க்கப்படும் ஊழியர்கள் இடமாற்றங்களுக்கு உட்பட்டவராவர் ;

(7) நியமனம் 3 ஆண்டு தகுதிகாண் காலத்துக்கு உட்படும். தகுதிகாண் காலத்திற்குள் வேலை, வரவு, நடத்தை என்பன திருப்திகரமற்ற ஊழியர்களின் சேவை முடிவு செய்யப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முறை-இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2014.12.26 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "தலைவர், தங்காலை நகர சபை, தங்காலை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வாறின்றேல் தங்காலை நகர சபைச் செயலாளரிடம் நேரடியாக ஒப்படைத்து அதனை ஒப்படைத்தமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '..... (பதவியின் பெயர்) பதவிக்கான விண்ணப்பம்' என்று குறிக்கப்படல் வேண்டும்.

தற்போது அரசாங்க /மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரூடாக அனுப்ப வேண்டும். உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;

(4) அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ்;

(5) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் 02 ;

(6) வேறு தகைமைகள் அல்லது சேவை அனுபவங்கள் பற்றிய சான்றிதழ்கள் ;

(7) விசேட தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

அனில் செல்லாஹென்னதி,
தலைவர்,
தங்காலை நகர சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தங்காலை நகர சபை

தென் மாகாண அரசாங்க சேவை பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் - 2014

..... பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆ) முதலெழுத்துக்கள் மூலம் குறிப்பிடும் பெயர் :-----.
2. நிரந்தர வதிவு மாவட்டம் :-----.
3. நிரந்தர வதிவு பிரதேச செயலாளர் பிரிவு :-----.
4. நிரந்தர முகவரி :-----.
5. பால் : ஆண்/பெண் :-----.
6. விவாகமானவர்/விவாகமாகாதவர் பற்றிய நிலை :-----.
7. பிறந்த திகதி :-----.
   2014.12.26 ஆந் திகதிக்கு வயது :
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
9. இலங்கைப் பிரசையாவது பிறப்பின் மூலமா பதிவின் மூலமா? :-----.
10. கல்வித் தகைமைகள் :-----.
11. வேறு தகைமைகள்:-----.
12. தொழில் தகைமைகள் :-----.
13. விசேட தகைமைகள் :-----.
14. சேவை அனுபவம் :-----.
    (1) தற்போது சேவையாற்றும் நிறுவனம் :-----.
    (2) தற்போது வகிக்கும் பதவி :----.
    (3) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
    (4) இதற்கு முன்னர் சேவையாற்றிய இடமும் வகித்த பதவியும் :-----.

15. இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிக்கும் நம்பிக்கைக்கும் உரிய விதத்தில் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் வெளிப்படுத்துகிறேன். இந்த ஆட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கேற்ப என்னால் பிழையான தகவலொன்று தரப்பட்டிருந்தால் நான் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அது வெளியானால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

தற்போது அரசாங்க /மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ..... தற்போது இந்தத் திணைக்களத்தில்/நிறுவனத்தில் ..... ஆக சேவையாற்றுகின்றார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்./முடியாது. அவர் எவ்வகையிலேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கைத் தவிர்ந்த) உட்படவில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்துவதோடு, விண்ணப்பத்தைச் சிபாரிசு செய்து/செய்யாது முன்வைக்கின்றேன்.

.....
திணைக்கள/நிறுவனத் தலைவர்
அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலரது கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
நிறுவனம் :----.
திகதி :----.

12-245

உள்ளூராட்சி அறிவித்தல்கள்

அளவ்வ பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்காக வரி விதித்தல் - 2015

அளவ்வ பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5-10 இன் கீழ் காணப்படும் பிரேரணை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றி பொது மக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

2015 ஆம் ஆண்டிற்காக அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்காக வரியினை உரிய அதிகாரப் பிரிவில் உரிய வரிக்கு உட்பட்ட பொதுமக்கள் அளவ்வ பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்றும் மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

பி. எம். பி. பீ. பி. வேத்தேவ,
தவிசாளர்,
அளவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அளவ்வ,
2014, நவெம்பர் 10.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவில் 1 ஆம் உப பிரிவின்படி பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அளவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கட்டிடங்களை கட்டமைப்பதற்கு அல்லது நிரந்தரம் இல்லாத போதும் எப்போதும் விவசாயம் செய்வதற்கு உகந்த ஏதாவதொரு காணியில் -

(அ) கட்டிடம் கட்டமைக்காத போது அல்லது
(ஆ) அந்த காணி முறையாக அல்லது சட்டரீதியாக விவசாயம் செய்வதற்கு உபயோகிக்கப்படாத போது அல்லது

உரிய காணி அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருத்திற் கொண்டும் அவ்வாறு அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதுகின்ற காணியின் மீது 2015 ஆம் ஆண்டிற்காக அந்த ஒவ்வொரு காணி நிலப்பரப்பின் மூலதன பெறுமதியில் 0.2% வருட வரியாக விதிப்பதற்கும் உரிய அபிவிருத்தி செய்யப்படாத காணி மீது வரி 2015 ஆம் வருடத்தில் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் அளவ்வ பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்று கட்டளையிட வேண்டும் என்று அளவ்வ பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

12-14

கண்டி மாநகர சபை

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயர் சூட்டுதல், நடுகல் நிர்மாணித்தல் (நினைவுச் சின்னம்) அவற்றை பரிபாலித்தல் சட்டம் "கலாசூரி ஸ்டென்லி பீரிஸ் மாவத்தை" என பெயரிடுதல்

2013.12.20 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட 08 (61) ஆம் இலக்க சபை தீர்மானத்தின்படி வீதிப் பெயரை மாற்றுவதற்கு கீழ்வருமாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2. (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 7 (11) இன் கீழ் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்கள் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயரிடுதல், நடுகல் நிர்மாணித்தல் (நினைவுச்சின்னம்), அவற்றை பரிபாலித்தல் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் பிரகாரமும் மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் அவர்களினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு ஏற்ப, கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மாவத்தைக்கு "கலாசூரி ஸ்டென்லி பீரிஸ் மாவத்தை" என பெயர் சூட்டப்பட்டுள்ளது என்பதை இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

சந்தன தென்னகோன்,
மாநகர சபை ஆணையாளர்,
கண்டி.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி.

அட்டவணை

01. உள்ளூர் அதிகார சபையின் பெயர்	:	*கண்டி மாநகர சபை*
02. மாவட்டம்	:	*கண்டி*
03. வீதியின் தற்போதைய பெயர்	:	*இல்லை*
04. புதிதாக சூட்டப்பட்டுள்ள பெயர்	:	*"கலாசூரி ஸ்டென்லி பீரிஸ் மாவத்தை"*
05. பாதை விபரம்	:	*கண்டி மாநகரப் பிரிவிற்குரிய சியம்பலகஸ்தென்ன முதலாவது ஒழுங்கையில் 24/33 ஆம் இலக்க இடத்திலிருந்து ஆரம்பித்து சியம்பலகஸ்தென்ன முதலாவது ஒழுங்கையில் 18/21 ஆம் இலக்க இடத்தில் முடிவடையும் பாதைப்பகுதி*

12-16

மாத்தறை மாநகர சபை

வரிமதிப்பு வரி அறவிடல் - 2015

இலங்கை நிதிக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) கீழ் மாத்தறை மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் படி வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் கீழ், மாத்தறை மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் xii ஆம் பிரிவின் 230 ஆம் பிரிவின் கீழ் மாத்தறை மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் கடந்த வருட விலைமதிப்பின் படி 2015 ஆம் ஆண்டில் செயற்படும் விதத்தில் வியாபார மற்றும் வணிக செயற்பாடுகள் தொடர்பாக நடத்தப்படும் நிலையங்களுக்கு நூற்றுக்கு 12% வருடாந்த வரிமதிப்பு வரியையும், ஏனைய சொத்துக்கள் தொடர்பாக நூற்றுக்கு 5% வருடாந்த வரிமதிப்பு வரியையும் 2015 ஆம் ஆண்டிற்கு அறவிடப்பட 2014.09.16 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 29 இன் கீழ் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாகவும், இதன்படி கீழே குறித்துள்ள விதத்தில் வரியை அறவிடப்படவென இத்தால் அறிவித்தல் கொடுத்துள்ளது.

(1) முறையே 2015, மார்சு 31, யூன் 30, செத்தெம்பர் 31 ஆகிய தினங்களில் அல்லது அதற்கு முன் சம பகுதிகள் நான்காக செலுத்த முடியும்.

(2) 2015 ஆம் வருடத்திற்கான வரியினை 2015 ஆம் வருட சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் முற்று முழுதாக செலுத்துவதாயின் முழு வரியின் பெறுமதியில் நூற்றுக்கு 10% கழிவினையும் ஒவ்வொரு தவணைக்குமான வரியினை ஒவ்வொரு தவணை கால ஆரம்பத்தில் செலுத்துவதாயின் நூற்றுக்கு 5% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

(3) மேலே 1 ஆம் பந்தியில் குறித்த தினங்களுக்குப் பின் செலுத்தப்படும் கட்டணங்கள் தொடர்பாக காணி மற்றும் இருப்பிட சொத்துக்களுக்கு நூற்றுக்கு 15% மேலதிக கட்டணத்தையும் ஏனைய சொத்துக்கள் தொடர்பாக நூற்றுக்கு 20% மேலதிக கட்டணத்தையும், தண்டப் பணமாக அறவிடப்படும்.

சேணக்க பல்லியகுருகே,
மாநகர ஆணையாளர்,
மாத்தறை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2014, நவெம்பர் 13.

12-19

கொழும்பு மாநகர சபை

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின்கீழ் (272 ஆம் அத்தியாயம்) 17 (1) பகுதியின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கொழும்பு மாநகர சபையின் மாநகர முதல்வர் ஆகிய நான், 2015 ஆம் ஆண்டின் கீழ் காணப்படும் முதலாவது, இரண்டாவது அட்டவணைகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களிலும், அரசினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்களிலும் என்னால் இடைக்கிடை அறிவிக்கப்படும் தினங்களிலும், கொழும்பு நகரத்தினுள் இறைச்சிக்காக மிருகங்களை வெட்டுதலும் விற்பனை செய்தலும் விற்பனைக்காக தொங்கவிடப்படுதலும், இறைச்சி விற்கும் இடங்கள் திறந்து வைக்கப்படுதலும் அறவே தவிர்க்கப்படல் வேண்டும் என அறிவிக்கின்றேன்.

அஹமட் ஜமல்டீன் மொஹொமட் முசம்மில்,
மாநகர முதல்வர்,
கொழும்பு மாநகர சபை.

நகர மண்டபம்,
கொழும்பு 7,
2014, நவெம்பர் 11.

முதலாவது அட்டவணை

சனவரி	04	துருது மாத போயா தினம்
பெப்புருவரி	03	நவம் மாத போயா தினம்
மாச்சு	05	மெதின் மாத போயா தினம்
ஏப்பிறல்	03	பக் மாத போயா தினம்
மே	03	வெசாக் மாத போயா தினம்
மே	04	வெசாக் மாத போயா தினத்திற்கு அடுத்த நாள்
யூன்	02	பொசன் மாத போயாதினம்
யூலை	01	அதி எசல மாத போயாதினம்
யூலை	31	எசல மாத போயாதினம்
ஓகத்து	29	நிகினி மாத போயாதினம்
செத்தெம்பர்	27	பினர மாத போயாதினம்
ஒற்றோபர்	27	வப் மாத போயாதினம்
நவெம்பர்	25	இல் மாத போயாதினம்
திசெம்பர்	24	உந்துவப் மாத போயாதினம்

இரண்டாம் அட்டவணை

பெப்புருவரி	04	தேசிய சுதந்திர தினம்
மே	01	உலக தொழிலாளர் தினம்
ஒற்றோபர்	04	உலக மிருக தினம்

12-37

மெததும்பர பிரதேச சபை

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (1) ஆவது பிரிவின்படி பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர் ஊன்வினைஞர் தொழிலைச் செய்வதற்காக 2015.01.01 முதல் 2015.12.31 ஆந் திகதி வரை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடத்திச் செல்ல அனுமதிப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். மெததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு இணைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் அதனை எனக்கு அனுப்புதல் வேண்டுமென இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

சுனேத்ரா ஜயரத்ன
தலைவர்,
மெததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மெததும்பர
தெல்தெனிய,
2014, நவெம்பர் 18.

அட்டவணை

விண்ணப்பிப்பவர் பெயர்	ஊன்வினைஞர் தொழில் நடத்துமிடம்	தன்மை
திரு. எச். எம். பாருக்	இல. 244, அம்பஹலன்த, தெல்தெனிய	மாடு அறுத்தல்

12-153/1

மெததும்பர பிரதேச சபை

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையத்தில் மாட்டிறைச்சி விற்பனைக்கான கடையொன்றை நடத்துவதற்கென 2015.01.01 ஆந் திகதி முதல் 2015.12.31 ஆந் திகதி வரை அனுமதிப்பத்திரம் வழங்கும்படி விண்ணப்பித்துள்ளதனால், மெததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை எதிர்ப்பதாயின், உரிய காரணங்களைக் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 14 நாட்களில் இணைப் பிரதிகளில் எனக்கு அனுப்புதல் வேண்டுமென ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (1) ஆவது பிரிவின்படி இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

சுனேத்ரா ஜயரத்ன
தவிசாளர்,
மெததும்பர பிரதேச சபை.

மெததும்பர பிரதேச சபை அலுவலகம்,
தெல்தெனிய,
2014, நவெம்பர் 18.

அட்டவணை

விண்ணப்பிப்பவர் பெயர்	ஊன்வினைஞர் தொழில் நடத்துமிடம்	தன்மை
திரு. எச். எம். பாருக்	இல. 70/ஏ, ஹிஞ்ராபுர, தெல்தெனிய	மாட்டிறைச்சிக்கடை

12-153/2

கண்டி மாநகர சபை

மதிப்பீட்டு அட்டவணை - 2015

கண்டி மாநகர சபையின் 2015 ஆம் வருடத்திற்கான மதிப்பீட்டு அட்டவணை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அவ் அட்டவணையை அலுவலக நேரத்தில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை (252 ஆம் அத்தியாயம்) கண்டி மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 235 (1) ஆம் பிரிவின்படி பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

சந்தன தென்னக்கோன்,
மாநகர ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2014, நவெம்பர் 11.

12-159/2

கண்டி மாநகர சபை

வருடாந்த வரிப்பண வரி விதிப்பு - 2015

(252 ஆம் அத்தியாயம்) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 230 ஆம் பிரிவின்படி கண்டி மாநகர சபை எல்லை பிரதேசத்தில் உள்ள சகல சொத்து உடைமைகளுக்கும் வருடப் பெறுமதியின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விகிதாசாரத்திற்கமைய வரிப்பண வரி விதிக்கப்பட்டுள்ளது இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்:-

(1) உள்ளக உடைமைகளுக்காக வருடாந்த பெறுமதியின்	*9%*
(2) உள்ளகமற்ற உடைமைகளுக்காக வருடாந்த பெறுமதியின் (வர்த்தகம், நிலம், நிர்மாணிக்கப்படும் கட்டிடங்கள், நிரப்பப்படும் வயல் நிலங்கள்)	*15%*
(3) பயிர் செய்யப்படும் வயல் நிலங்கள் வரிப்பண வரியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.	

2015 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்ட முழு வரிப்பண வரியும் 2015.01.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பாக செலுத்தும் பட்சத்தில் 10% கழிவும் காலாண்டிற்குரிய வரிப்பண தொகை காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தும் பட்சத்தில் 5% கழிவும் வழங்கப்படும்.

மேலும் 2015 ஆம் ஆண்டின் வரிப்பண வரித்தொகை 4 காலாண்டிற்கும் சமமான தவணை முறையில் முறையாக மார்ச 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆந் திகதிகளில் அல்லது அதற்கு முன்பதாக செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறும் சகல சொத்துக்களுக்கும் மாநகர சபை ஆணைச்சட்டத்தின் 252 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் உள்ளக உடைமைகளுக்காக 15% பற்றாணைக் கட்டணமும் உள்ளகமற்ற உடைமைகளுக்காக 20% பற்றாணைக் கட்டணமும் அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

சந்தன தென்னக்கோன்,
மாநகர ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2014, நவெம்பர் 11.

12-159/1

நானாவித அறிவித்தல்கள்

புத்தளம் நகர சபை

ஆதன வரி விதித்தல் - 2015

புத்தளம் நகர சபையால் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை அமர்வின்போது தீர்மான இலக்கம் 3 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டது என்பதனை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2015 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்படுகின்ற மொத்த ஆதன வரியினை மார்ச 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 எனும் திகதிகளில் முடிவுறும் சகல காலாண்டுகளுக்குள்ளும் நான்கு சமமான தவணைகளில் நகர சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமெனவும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

2015 ஆம் ஆண்டுக்கான மொத்த ஆதன வரியையும் 2015 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நகர சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டால் அந்த மொத்த ஆதன வரித் தொகையினின்றும் நூற்றுக்கு பத்து (10%) வீத கழிவொன்றும், ஒவ்வொரு காலாண்டுக்குமான ஆதன வரியினை ஒவ்வொரு காலாண்டினதும் முதல் மாதத்தின் இறுதி தினத்திற்கு முன்னால் நகர சபைக்குச் செலுத்தினால் நூற்றுக்கு ஐந்து (5%) வீத கழிவொன்றும் வழங்கப்படும்.

கே. ஏ. பாயிஸ்,
தலைவர்,
புத்தளம் நகர சபை.

நகரசபை அலுவலகம்,
புத்தளம்,
2014, நவெம்பர் 04.

தீர்மானம்

"(255 ஆம் அத்தியாயம்) நகர சபைக்கான சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயம்) மாநகர சபை சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி புத்தளம் நகர சபையின் அதிகார எல்லையினுள் அமைந்துள்ள சகல வீடுகளின், கட்டிடங்களின், காணிகளின், வீட்டுத்தளங்களின் 2008/2009 ஆம் ஆண்டுக்கான சொத்து மதிப்பீட்டின்படி பெறுமதியினை 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கும், மேற்சொல்லப்பட்ட நகர சபை சட்டத்தின் 160 ஆம் பிரிவின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின்படி மேற்சொன்ன வருடாந்த பெறுமதியில்-

(அ) வதிவிடங்களின் பெயரில் நூற்றுக்கு ஐந்து (5%) வீத ஆதன வரியொன்றையும் ;

(ஆ) வர்த்தக அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்படுகின்ற இடங்களின் பேரில் நூற்றுக்கு ஒன்பது (9%) வீத ஆதன வரியொன்றையும் ;

2015 ஆம் ஆண்டுக்காக விதித்து அறவிடுவதற்கும், அந்த வரிப்பணத்தினை மேற்சொல்லப்பட்ட நகர சபை சட்டத்தின் 170 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்சொல்லப்பட்ட மாநகர சபை சட்டத்தின் 230 ஆம் பிரிவின், (2) ஆம் உப பிரிவின் (ஏ) பந்தியின் சட்ட உடன்பாடுகளின் கீழ் அந்த வருடத்தின் மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 எனும் திகதிகளில் முடிவுறும் காலாண்டுகள் நான்கினுள் சமமான நான்கு தவணைகளில் செலுத்துவதற்கு கட்டளை பிறப்பிப்பதற்கும் புத்தளம் நகர சபை தீர்மானிக்கின்றது.

12-5/1

புத்தளம் நகரசபை

வர்த்தக வரி விதித்தல் - 2015

புத்தளம் நகர சபையால் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை அமர்வின்போது தீர்மான இலக்கம் 3 இன்கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2015 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்ட வர்த்தக வரியினை அந்த வருடத்தின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் நகரசபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகிறது.

கே. ஏ. பாயிஸ்,
தலைவர்,
புத்தளம் நகர சபை.

நகரசபை அலுவலகம்,
புத்தளம்,
2014, நவெம்பர் 4.

தீர்மானம்

"(255 ஆம் அத்தியாயம்) நகர சபைக்கான சட்டத்தின் 165ஆ பிரிவின்கீழ் நகர சபைகளுக்கு கிடைத்திருக்கும் அதிகாரங்களின்படி, மேற்சொன்ன சட்டத்தின் அல்லது அதன்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதாயினுமொரு துணைவிதியின் சட்ட உடன்பாடுகளுக்கமைவாக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளவோ, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 165அ பிரிவின்கீழ் ஏதாயினுமொரு தொழில் வரியொன்றினை செலுத்துதல் தேவைப்படாத, தொழில் அல்லாத ஏதாவது ஒரு வர்த்தகமொன்றை புத்தளம் நகர சபையின் அதிகார எல்லைக்குள் 2015 ஆம் ஆண்டில் நடாத்துகின்ற யாராவதொருவரிடமிருந்து அந்த வர்த்தகத்திலிருந்து அதற்கு முன்னைய வருடத்தின் வருமானம் இங்கு கீழே காட்டப்படுகின்ற அட்டவணையின் I ஆம் நிரலில் தெளிவாக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வழமையான விடய அலகின் எல்லைக்குள் உள்ளடங்கும் சந்தர்ப்பத்தில் அதன் II ஆம் நிரலில் உகந்த விதத்தில் தெளிவாக்கப்பட்டுள்ள வழமைப்படியான வர்த்தக வரியொன்றினை 2015 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடுவதற்கும், வரிக்குட்படுத்துகின்ற யாராவதொருவர் மேற்சொல்லப்பட்ட வர்த்தக வரியை 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் புத்தளம் நகரசபைக்கு செலுத்த வேண்டுமெனவும் புத்தளம் நகரசபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை

	I ஆம் நிரல் வரிக்கான வருடத்தின் முன்னைய வருடத்தில் வர்த்தகம் மூலம் கிடைத்த வருமான அளவு	II ஆம் நிரல் செலுத்தவேண்டிய வரி ரூபா ச.
1	ரூபா 6,000 ஐத் தாண்டாத சந்தர்ப்பத்தில்	இல்லை
2	ரூபா 6,000 ஐத் தாண்டும் அதே சமயம் ரூபா 12,000 ஐத் தாண்டாத சந்தர்ப்பத்தில்	90 0
3	ரூபா 12,000 ஐத் தாண்டும் அதே சமயம் ரூபா 18,750 ஐத் தாண்டாத சந்தர்ப்பத்தில்	180 0
4	ரூபா 18,750 ஐத் தாண்டும் அதே சமயம் ரூபா 75,000 ஐத் தாண்டாத சந்தர்ப்பத்தில்	360 0
5	ரூபா 75,000 ஐத் தாண்டும் அதே சமயம் ரூபா 1,50,000 ஐத் தாண்டாத சந்தர்ப்பத்தில்	1,200 0
6	ரூபா 1,50,000 ஐத் தாண்டும்போது	3,000 0
7	வருட வருமானம் 1% ஐத் தாண்டாத சந்தர்ப்பத்தில்	சென்ற வருட வருமானத்தின்படி
8	வருட வருமானம் உத்தேசப்படி 15%	வருட விசேட வருமானத்தின்படி

கமிஷன் ஏஜண்டுகள்
ஏலத்தில் விடுபவர்கள்
தரகர்கள் (காணி, வாகனம்)
பண முதலீட்டாளர்கள்
ஈடு பிடிப்பவர்
கொந்தராத்துக்காரர்கள்
வழங்குநர்கள்
சாரதிகளைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள்
காப்புறுதி நிறுவனங்கள்
மோட்டார் வாகனங்கள் விற்பனை செய்வோர்
கொங்கிறீட் பைப்கள், மின்சார கம்பிகள் உற்பத்தியாளர்கள்
சுப்பர் மார்க்கட் நடத்துபவர்கள்
வைன் ஸ்டோர்/வெளிநாட்டு மதுபான வகைகளை விற்குமிடங்கள்
சுற்றுலாச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்கள்
தரிப்பிடத்துடன் கூடியதான மதுபான விற்பனை நிலையம்
தரிப்பிடத்துடன் கூடியதான உணவகமொன்று
பொருட்களை ஏற்றி இறக்கும் நிறுவனங்கள்
திட்டமிடலாளர்கள்
பிரசித்த நொத்தாரிசுகள்
வங்கிகளும் நிதி நிறுவனங்களும்
பந்தயம் பிடிக்கும் நிலையங்கள்
இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் விற்பனை
மிருகங்களைக் கொல்லும் இடமொன்றை நடாத்துதல்
மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் விற்பனை
பால் சேகரிக்கும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம்
சர்வதேச பாடசாலையொன்றினை நடாத்துதல்
தொலைபேசி அழைப்பு வசதி வழங்கும் ஸ்தாபனங்கள்
கையடக்கத் தொலைபேசி கோபுரங்களை நடாத்துதல்
தனியார் வைத்திய நிறுவனங்கள்
தனியார் பஸ் வண்டிகள் கம்பனி உரிமையாளர்கள்
எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள்
சட்டத்தரணிகள்
லொத்தர் சீட்டு விற்பனை முகவர்
ஒரே இடத்தில் பல வியாபாரங்களை செய்வோர்
தனியார் பாதுகாப்பு சேவைகள்
பெயிண்ட் அடிப்போர்
நில அளவையாளர்
முட்டைகள் விற்பனை செய்யும் இடங்கள்
பனிக்கட்டி (ஐஸ்) களஞ்சியப்படுத்தும் இடங்கள்
காட்சியகமொன்றை நடாத்துதல்
தேங்காய் விற்பனையும் சேகரிக்கும் இடமொன்றையும் தயாரித்தல்
மரமுந்திரிகை உற்பத்திகளை உற்பத்தி செய்தலும், சந்தைப்படுத்தலுக்குமான நிலையம்
விவசாய உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் விற்பனை
